RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22452

# தமிழ் செவ்வியல் இலக்கியங்களில் சூழலியல் பதிவுகள்

ரா. ரவிக்குமார் [அ, *]

[அ] மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-641021, இந்தியா

# Ecological Records in Tamil Classical Literature

R. Ravikumar [a, *]

[a] Language Department – Tamil, Karpagam Academy of Higher Education, Coimbatore-641021, India

* Corresponding Author: rravi0101@gmail.com

Received: 13-07-2022
Revised: 01-10-2022
Accepted: 11-10-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

Tholkappiyam is the best grammar book for Tamil literature. Such a grammar book is the norm for the way of life of tamils. The Sangam literature follows the traditions of the Tolkappian Thinai and all modern literary works are composed of new principles, principles and traditions of modern thought. In particular, the Sangam literature is integral to the life and antiquity of the Tamils. Moreover, most of the works are constructed in harmony with nature. To that extent, nature and ecology have remained its own personality in the Tamil context and literary spaces. Thus, by identifying the natural ecology records in the periodic literature, it becomes important to examine them because of the extent to which the natural ecology of earlier times gradually diminishes and provides an opportunity to find out the cause of ecological degradation in the present day.

**Keywords:** Classical literature, Ecological records, Tamil literature, Tholkappiyam

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களுக்கு எல்லாம் தலைசிறந்த இலக்கண நூலாக இருப்பது தொல்காப்பியம் ஆகும். அப்படிப்பட்ட இலக்கண நூலானது தமிழர்களின் வாழ்க்கை முறைக்கு நெறிமுறையாக இருக்கிறது. தொல்காப்பியத் திணை மரபுகளை அடியொற்றியே சங்க இலக்கியம் தொடர்ந்து தற்கால இலக்கியப் படைப்புகள் யாவும் புதிய கொள்கைகளையும், கோட்பாடுகளையும், நவீன சிந்தனை மரபுகளையும் கொண்டதாக அமைகின்றன. இதில் குறிப்பாக சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்வியல் மற்றும் தொன்மை சிந்தனையோடு ஒன்றியதாகவே உள்ளது. அதுமட்டும் அல்லாது பெரும்பாலான படைப்புகள் இயற்கையோடு இணைந்தே கட்டமைக்கப்பட்டுள்ளன. அந்த அளவிற்கு இயற்கை மற்றும் சூழலியல் என்பது தமிழ் சூழல் இலக்கிய வெளிகளில் தனக்கான ஆளுமை கொண்டதாகவே இருந்துள்ளது. இவ்வாறு காலந்தோறுமான இலக்கியங்களில் இயற்கை சூழலியல் பதிவுகளை இனங்காண்பதன்வழி, முந்தைய காலங்களில் இருந்த இயற்கை சூழலியலானது எந்த அளவிற்கு படிப்படியாகக் குறைந்து, தற்காலத்தில் சூழலியல் அழிவிற்கான காரணத்தைக் கண்டறிவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதனால் இவற்றை ஆராய்வது முக்கியத்துவம் பெறுகிறது.

## தொல்காப்பியரின் திணைக் கோட்பாடு

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் கிடைத்த மிகத் தொன்மையான இலக்கண நூலாகத் திகழ்வது தொல்காப்பியம் ஆகும். இன்றும் தமிழறிஞர்கள் மற்றும் தமிழ் புலவர்களால் தொல்காப்பியரின் திணைக்கோட்பாடு பின்பற்றப்படுகிறது. இது ஐந்திணைகளுக்குரிய முதல்பொருள், கருப்பொருள்,

உரிப்பொருள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டுள்ளது. தமிழர்களுடைய மரபுரீதியான பண்பாடு, வாழ்க்கை முறை, இலக்கிய மரபுகள் மற்றும் அவற்றின் சிறப்புகளை ஆராய்வதற்கான தரவுகளை ஆராய்ச்சியாளருக்குத் தருகிறது. நிலத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பகுக்கப்பட்ட பாகுபாடு நிலத்திணை ஆகும். அது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வகையாக பாகுபடுத்தப்பட்டுள்ளது. முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலையாக மாறும் பொழுது அது ஐந்தாக எண்ணப்பட்டது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று மலர்களின் பெயர்களைத் தாங்கிய ஐவகை நிலங்களும், அந்நிலங்களின் காலச் சூழல்களையும், உயிரியல் பன்மியத்தையும், அவை ஒன்றோடொன்று கொண்டிருக்கிற இணக்கத்தையும் விளக்குகிற வகையில் தொல்காப்பியரின் முதல், கரு, உரி ஆகிய முப்பொருள்களும், அமைந்திருக்கின்றன. இவை இயற்கையோடு தமிழ் சமூகம் கொண்டிருந்த உறவை விளக்குவதற்கு ஏற்ற சான்றுகளாகின்றன. மேலும் இவை வெறுமனே இயற்பியல் அடிப்படையிலான பகுப்புக்களாக இல்லாது மக்கள் வாழ்வியலோடு இணைந்தவையாக அமைந்திருந்தன. "தமிழ் நிலம் சார்ந்தும், தமிழ் வாழ்வியல் சார்ந்தும் சமூகம், வரலாறு, பண்பாடு முதலிய சூழல்கள் சார்ந்தும் எழுந்த படைப்புகளைப் புரிந்துகொள்வதற்கு தொல்காப்பியரின் திணைக்கோட்பாடு அறிஞர்களால் முன்மொழியப்படுகிறது. அடிப்படையில் எந்த ஒரு படைப்பும் படைப்பாளனின் உலகியல் சூழல்களைக் கொண்டும் அதற்கான எதிர்வினையாற்றும் வகையிலும் உலக வாழ்வோடு இணைந்த ஒன்றாக இல்லாமல் அந்தரத்தில் தோன்ற வாய்ப்பில்லை. ஆக படைப்பு இயற்கைக்கும் வாழ்விற்கும் மிக நெருங்கிய மனித உறவைச் சொல்வதாக இருக்கிறது. வாசகனும் ஒரு படைப்பைப் புரிந்துகொள்வதில், தான் சார்ந்த இயற்கை, சமூகம், வாழ்க்கை, வரலாறு முதலியவற்றை உள்ளடக்கிய வெளியில் இருந்துதான் பயணிக்கிறான். படைப்பும் அவ்வாறுதான் தோற்றம் கொள்கிறது. இவ்வாறான பிரதியியல் சார்ந்த கருத்தாடல்களும் சமகாலத் திறனாய்வுச் சூழலியல் பேசப்படுகின்றன. தொல்காப்பியரின் திணைக்கோட்பாடு இவ்வாறான நிலம், வரலாற்றுக் காலம், சமூகவியல் சார்ந்த நோக்குகளை முன்வைக்கிறது என்ற கருத்து முதன்மையானது. இந்த அடிப்படையில் தான் திணைக்கோட்பாட்டு ஆய்வும் முதன்மைக்கு உரியது என்று அறிஞர் கருதுகின்றனர்" என்ற ஜவகரின் கருத்து எழுத்தாளனின் படைப்பு என்பது மானிட சமூகத்தில் இயற்கைக்கும், வாழ்விற்கும் இடைப்பட்ட நெருங்கிய மனித உறவைக் கட்டமைக்கிறது என்பதையும் புலப்படுத்துகிறது (Jawahar, 2014). இயற்கை, சமூகம், வாழ்க்கை, வரலாறு இவற்றின் பின்புலத்தைக் கட்டமைக்கும் வகையில் திணைக்கோட்பாடு உருவாகிறது என்கிறார். இன்னும் இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பாமயனின் 'திணையியல் கோட்பாடுகள்' என்னும் நூலின் முன்னுரைப் பகுதி அமைந்துள்ளது "இன்றைய நவீன உயிரியல் பகுப்பு முறை சூழல்தொகுதிகளை (Eco System) எப்படிப் பார்க்கிறதோ, அதே வகையில் நமது திணைப்பகுப்பு இருக்கிறது என்கிறார் தாவரவியல் அறிஞர் கு.வி.கிருஷ்ணமூர்த்தி. இதுவே உலகின் முதல் அறிவியல் அடிப்படையில் அமைந்த சூழல்தொகுதி வகைப்பாடு. உலகின் பண்டைய நாகரிகங்களில் இதுபோன்ற பகுப்பு முறைகளைப் பார்க்க முடிகிறது என்றாலும், அந்தப் பகுப்பு முறைகள் எதுவும் தமது திணையியல் கோட்பாடு போலத் திட்டவட்டமானதாக, இன்றைய நவீன அறிவியல் பகுப்பு முறைகளுடன் பொருந்திப் போவதாக இல்லை என்பதே திணையியல் கோட்பாட்டின் சிறப்பு என்கிறார் அவர். அது மட்டுமின்றி, ஒவ்வொரு திணையையும் சுட்டிய ஒரு மலரின் பெயரைத் தந்தது, ஒவ்வொரு திணைக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் போன்றவற்றை வகுத்து அளித்து, பண்பாட்டு வாழ்வுடன் பிணைப்பை உருவாக்கியிருந்தது போன்றவை திணையியலின் மற்ற சிறப்புகள். அது மட்டுமில்லாமல், சூழலியல் சிதைவு பற்றியும் முதன்முதலில் எடுத்துக்காட்டியதும் திணைக்கோட்பாடுதான்" என்று பாமயன் எடுத்துரைத்துள்ளார் (Pamayan, 2012). இவர் திணையியல் எனும் சொல்லிற்கு இணையானதாக 'Ecology' (சூழலியல்) எனும் ஆங்கிலப் பதத்தையே பயன்படுத்துகிறார்.

இவ்வாறு தொல்காப்பியரின் ஐந்திணைகளும் பயன்படுத்தப்பட்டுக் கோட்பாடாகக் கட்டமைக்கப்படுகிறது. புவியியல் அடிப்படையில் காடு, மலை, மிகுதியான நீர் வளம் நிறைந்த வயல் பகுதி, பெருமணல் நிறைந்த கடல் சூழ்ந்த பகுதி என நான்காகப் பிரித்து அவற்றிற்குரிய பழக்க வழக்கம், தொழில், உணவு முறை ஆகிய வாழ்வியல் நெறிகளை வகுத்தமைத்து, உரிப்பொருள்களின்

மூலம் பாலியல் நடத்தை ஒழுகலாறுகள் பதிவு செய்யப்படுகின்றது. எல்லாத் திணைகளுக்கும் உரியதாக அனைத்து உரிப்பொருள்களும் இருப்பினும், அவை குறியீட்டமைப்பின் மூலம் ஒரு திணைக்கே சிறப்புடையனவாக இருக்கின்றது. இப்பாலியல் ஒழுக்கமானது களவு, கற்பு வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டு அமையும் போது கைகோள் கோட்பாடாகிறது. களவு, கற்பு ஆகிய இரண்டிலும் ஐந்திணைகளின் பங்கு முக்கியமானது. இறுதியாக தொன்மை வாய்ந்த நூலான தொல்காப்பியம், சிறந்த கோட்பாட்டுத் திறனாய்வு நூலாகத் திகழ்கிறது. தொல்காப்பியர் சொற்களைக் குறியீட்டாக்கம் செய்து அவற்றை கோட்பாடாகக் கட்டமைக்கிறார். இலக்கியக் கோட்பாடு என்பது இலக்கியத்தின் பொதுமை ஆக்கக் கூறுகளை விளக்குவதாக அமையும். இலக்கியத்தின் பொதுமைப் பண்புகள் புனைவமைக்கப்பட்டிருக்கும் நெறியினை விளக்குவதாகவே தொல்காப்பியரின் திணைக்கோட்பாடு அமைகிறது.

## சங்க இலக்கியத்தில் இயற்கை

சங்க காலத்து மக்கள் காதலையும் வீரத்தையும் இரண்டு கண்களாக போற்றினர். அதோடு அதற்கு இணையாக இயற்கையும் போற்றிக் காத்து வாழ்ந்து வந்தனர். அதற்கு சங்க இலக்கியப் பாடல்கள் சான்று பகர்கின்றன. அவர்கள் தங்களின் வாழிடச்சூழலை இயற்கை பின்னணியில் அமைத்துக்கொண்டனர். தாங்கள் வாழும் இடத்தையும், அதனைச் சுற்றியுள்ள நில அமைப்பையும் சேர்த்தே ஒன்றாக இயற்கை சூழலியல் முன்னிறுத்தப்பட்டது. இயற்கை பற்றிய அடிப்படையான புரிதலையும், அச்சத்தையும் தெரிந்துக் கொண்ட சங்ககால மக்கள் அவற்றை வழிபடும் தெய்வமாகவும், தங்களுடைய குடும்பத்தில் ஒருவராகவும் நினைத்து காத்துவந்தனர் என்பதற்கு சான்றாக,

“நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்என்று

அன்னை கூறினள் புன்னையது நலனே”

என்ற நற்றிணைப் பாடலைக் குறிப்பிடலாம் (Parimanam & Balasubramaniyam, 2004). இது புன்னை மரத்தையும் தன்னுடைய உடன் பிறப்பாக நினைக்கின்ற பார்வை சங்க கால மக்களிடம் இருந்ததனைச் சுட்டுகின்றது. மேலும், அவர்களிடம் இயல்பாகவே இயற்கையை நேசிக்கும் பழக்கம் நிலவியிருந்ததையும் அதனுடன் உறவாடுவதுமாகவும் அவர்களின் வாழ்க்கை முறை இருந்ததனை விளங்கிகொள்ள முடிகிறது. “சங்கநூல்களில் இயற்கை, பின்னணியாக மட்டுமே வருகிறது. தனி இயற்கை புனைவுப் பாடல்கள் இங்குத் தோன்றவில்லை மக்களின் செயல்களோடு அவை இயையுப் பின்னணியாக இணைந்துப் பாடப்படுகின்றன” என்று ‘சங்க இலக்கிய ஒப்பீடு’ என்னும் நூலில் தமிழண்ணல் கூறுகிறார் (Thamizhannal, 2011). சங்க இலக்கியங்களில் இயற்கைகென்று தனிப்பாடல்கள் பாடப்படவில்லை. அனைத்துப்பாடல்களும் தலைவன், தலைவியை முன்னிலைப்படுத்தி இயற்கை பின்னணியை அவர்களோடு ஒன்றி வருமாறு புலவர்கள் பாடல்களைப் புனைந்துள்ளனர்.

சங்க இலக்கியத்தில் மரம், செடி, கொடி பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அதற்கடுத்து பறவைகள், விலங்கினங்கள் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. விலங்கினங்களைவிடப் பறவையினங்கள் தமிழகத்தில் மிகுதியான அளவில் காணப்பட்டதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. சங்ககாலப் புலவர்கள் மரம், விலங்கு, பறவை முதலியவற்றின் இயல்புகளை நன்றாக உணர்ந்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்ற உ.வே.சாவின் கூற்று சங்க இலக்கியப் புலவர்கள் சூழலியல் அறிஞர்களாகவும் விளங்கியுள்ளனர் என்பதைத் தெளிவாக அறியலாம். “இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிறவுயிர்களின் மீது அன்பு செலுத்தவும், பிறவுயிர்களின் துயர்கள் போக்கிக்காப்பதும் இயல்பாக இருந்தன. பற்றிப்படரக் கொழுகொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தான் ஏறிவந்த தேரை நிறுத்திவிட்டு நடந்தே அரண்மனை சேர்ந்த வள்ளல் பாரி சூழல்காப்பிற்கு முன்னோடி எனலாம். கால்நடைகளே செல்வங்கள் எனக் கருதிய பழந்தமிழர்கள் போர்நடத்துகிறபோது அவற்றுக்குக் கேடு நிகழாமல் பாதுகாப்பான இடங்களில் விட்டுவிட்டுப் பின்னரே மோதியிருக்கின்றனர்” என்ற சேதுபதியின் கருத்து சங்கால மக்கள் சூழலியலை எவ்வாறு காத்தும் போற்றியும் வந்தனர் என்பதனை எடுத்தியம்புகிறது (Sethupathi, 1964). ஆனால் இன்றைய உலகமயமாக்கப்பட்ட சூழலில் மனிதன் இயற்கையிலிருந்து அந்நியப்படுத்திக்

கொண்டு வாழநேர்கிற நெருக்கடி சூழல் இயல்பாகவே ஏற்பட்டுவிடுகிறது. சங்க இலக்கியங்களில் மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்திருக்கிறான் என்பதனைப் பின்வரும் அகநானுற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. இதனை,

"என்றூழ் வியன்குளம் நிறையவீசிப்

பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறை

பல்லோர் உவந்த உவகை எல்லாம்"

என்ற பாடலடிகள் மூலம் உணரலாம் (Jeyabal, 2011). மழை வளத்தால் ஏரி, குளங்கள் செழித்து தண்ணீர் காணப்படுவதை மேற்கண்ட பாடல் விளக்குகிறது. சங்ககாலத்தில் இயற்கை வளம், செழுமை, மழைவளம் ஆகியவை மனிதனை இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுத்தன. மேலே சொல்லப்பட்ட மழைவளம், நீர்வளம் நிறைந்திருந்தன எனப் பேசப்பட்டாலும் சங்க இலக்கிய பாடல் ஒன்று கலங்கிய நீரினைப் பருகிய மக்கள் குறித்த பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. இதனை,

"அன்னாய் வாழி! வேண்டு அன்னை நம் படப்பைத்

தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு

உவலைக் கூவல் கீழ்

மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே"

எனும் ஐங்குறுநூற்றுப் பாடல் விளக்குகிறது (Avvai Duraisamy Pillai, 1957). இவ்விடத்தில் இயற்கையானது வளமையாக இருந்த போதும் வளமை குன்றியபோதும் அதனுடன் இயைந்தே சங்க கால மக்கள் தங்களுடைய வாழ்வை நடத்தினார்கள் என்பது புலனாகிறது. "மனித இனத்தின் பேராற்றல்களாகிய காதல், வீரம் ஆகிய இரண்டையும் ஊடுருவிப் பாய்ந்து பரந்துகிடக்கச் செய்யும் அளவிற்கு, இயற்கையினிடத்து அவர்கள் எல்லையற்ற காதல் கொண்டிருந்தனர். இத்துணையளவு இயற்கைக்கு இலக்கியத்தில் இடம் அளித்தும், இயற்கை என்ற சொல்லோ அதற்கு இனமான பிறிதொரு சொல்லோ ஓர் இடத்தும் குறிக்கப்படவேயில்லை. உலக வாழ்வில் மனித வாழ்வு ஒரு கூறு என்றால், அவனுக்குப் புறத்தே உள்ளவற்றைப் பிறிதொரு கூறு என்பர். அப்புற வாழ்வின் குறியீடு என்ற அளவில்கூட இயற்கை என்ற சொல்லைச் சங்க இலக்கியம் குறிக்கவில்லை. இறைவனுக்கும் அண்டங்களுக்கும் இடையேயுள்ள பிணைப்பினைப் புலப்படுத்தி உறவாடச் செய்வது இயற்கை என்று பலர் கூறுவர். அவ்வகையிலும் சங்க இலக்கியம் இயற்கையைக் குறிப்பிடவில்லை" என்ற மு.வரதராசனாரின் கருத்தாக்கம் பெரும்பாலும் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள பாடல்கள் இயற்கை புனைவுப்பாடல்களாகவும், சங்க காலம் இயற்கை நெறிக் காலம் என்று சொல்லப்படுவதாகவும் இயற்கை என்கிற சொல்லாட்சியானது சங்க இலக்கியங்களில் எந்த இடத்திலும் காணப்பெறவில்லை என்பதனையும் தெளிவுப்படுத்துகிறது (Varadharasan, 1964). மேலும் "மானிட உணர்வுகளே இந்தத் தொகைநூல்களின் முதன்மையான பொருளாக இருந்தாலும், அந்த உணர்வுகள், இயற்கையோடு மிக நெருக்கத்திலும், ஒன்றிசைந்தும் வாழ்ந்த மக்களுடையவை. கவிதை சிறியதாகும்போது இயற்கை பற்றிய அதன் குறிப்புணர்த்தலும் தீவிரமாகிறது. கவிதை நீளமாகும்போது இயற்கை பற்றிய வருணனை மிகுதியாகிறது. மனிதனுக்கும் இயற்கைக்குமான பரஸ்பர செல்வாக்கின் உறுதிப்பாடு வெளிப்படத் தெரிகிறது. இந்தக் கவிதைகளில் தீவிர உணர்வுகளுக்கு ஒருசில அடிகளிலேயே குறிப்பாக உணர்த்தப்பட்டாலும், இந்த உணர்வுகளுக்குப் பொருத்தமான நிலத்தோற்றங்களும் இயற்கை சூழல்களுமே விரிவாகப் படைக்கப்படுகின்றன. இவற்றில் பல கவிதைகள் இயற்கை சூழல்களுமே விரிவாகப் படைக்கப்படுகின்றன. இவற்றில் பல கவிதைகள் இயற்கை நிலக்காட்சிகளே" என்ற க.பூரணச்சந்திரனின் கூற்றும், "சங்க இலக்கியம் இயற்கையோடு இயைந்த இலக்கியம். இயற்கையின் ஒவ்வொரு கூறும், ஒவ்வொர் அசைவும் தனக்கு ஏதோ ஒன்றை உணர்த்துவதாக எண்ணிய இயைபு, சங்க இலக்கியத்திற்கே சிறப்பாக உண்டு. இயற்கையோடு இயைபு என்பது இயற்கையைப் போற்றுதலோ, வழிபடுதலோ அன்று. வாழ்க்கைக்கும் இயற்கைக்கும் இடையே

உள்ள திண்ணிய பிணிப்பை உணர்தலாகும்" என்கிற கு.வெ.பாலசுப்பிரமணியனின் கூற்றும் சங்க இலக்கியத்தில் இடம் பெறக்கூடிய தலைவன், தலைவி இவர்களின் குறியீடு மற்றும் உணர்ச்சி முறைகளின் வாயிலாக இயற்கை புனையப்பட்டிருக்கிறது என்கிற கருத்தை வலியுறுத்துகிறதாக அமைந்திருக்கின்றன (Balasubramaniyam, 2004). இவ்வாறு சங்கப்பாடல்களில் முதன்மைப் பெற்றுள்ள பண்டைய தமிழரின் வாழ்க்கை முறையில் கலை, தொழில், சமயம், மருத்துவம், உணவு போன்றவற்றில் இயற்கை ஆதிக்கம் செலுத்துகிறது. எந்தயளவிற்கு புலவர்கள் அகப்பாடல்களில் இயற்கையின் தனித்துவத்தைச் சிறப்பித்துப் பதிவு செய்தார்களோ அதேபோல் புறப்பாடல்களின் வாயிலாக இயற்கை அழிவுக்குள்ளானதையும் தங்களுடைய பாடல்களில் பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அற இலக்கியத்தில் இயற்கை

திருக்குறள் என்பது உலக மக்கள் அனைவராலும் போற்றக்கூடிய தலைச்சிறந்த நூலாகும். திருக்குறளில் இடம்பெறும் அறக்கருத்துகள் அனைத்தும் அக்காலத்தில் இருந்து எக்காலத்திற்கும் போற்றும் வகையில் அமைந்துள்ளன. ஒரு மனிதன் சமூகத்தில் எந்தச் செயல்களைச் செய்யவேண்டும் எந்தச் செயல்களைச் செய்யக்கூடாது என்று தனித்தனியாகச் சொல்லியிருக்கின்றார். இயற்கையின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்த திருவள்ளுவர் 'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்தில் நீர் வளத்தின் சிறப்பியல்புகளைத் தெளிவாகவும், விரிவாகவும் விளக்கியுள்ளார். மழைநீரினால் இயற்கை பெறுகின்ற பயனை மிக அழகாகத் தெளிவுப்படுத்துகிறார். இதனை,

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்

தம் என்றுணரற் பாற்று"

உலகின் உயிரினச் சூழற்சியும் ஒன்றோடு ஒன்று மிகுந்த தொடர்பைக் கொண்டுள்ளது. மழையானது பருவம் தவறாது பெய்தலால்தான் நிலத்தில் இருக்கும் ஓரறி உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரை செழித்து வாழ்ந்து வருகின்றன. ஆகவே மழையானது உயிர்களுக்கு அமிழ்தமாகக் கருதப்படுகிறது. பருவகால மழை பற்றியும் குறிப்பிடுகின்றார் (Puliyur Kesigan, 2016).

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே

பசும்புல் தலைகாண்ப தரிது"

எனும் குறட்பாவில் உலகில் எப்போதும் வற்றாத ஆதாரமாகக் கிடைப்பது நீர் ஆகும் (Puliyur Kesigan, 2016). நிலத்தில் உள்ள எல்லா உயிரினங்களும் நீரைச் சார்ந்துள்ளன. பருவமழையின் நீர்ப்பற்றாக் குறையினால் பயிர்கள் மட்டுமின்றி மானிடர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேகங்கள் நீரைப் பொழியாவிடில் ஒருசிறுபுல் கூட பூமியில் முளைக்காது இதனை உணர்த்தும் வகையில் இக்குறள் அமைகிறது. மேலும், இயற்கை சூழலியல் செம்மையாக இருக்கும்மெனின் அதற்குக் காரணம் மழைதான் உலகில் இருக்கும் உயிர்களையெல்லாம் இயக்கும் அடிப்படைக் காரணியாக அமைகிறது. நம் முன்னோர் இயற்கையின் முக்கியத்துவத்தை அறிந்து மழை பெய்யும் காலங்களில் குளங்களை வெட்டி ஏரி அமைத்தும் கிணறுகளைத் தோண்டி நீரைச் சேமித்தும், மழை பெய்யாக் காலங்களில் அவற்றைப் பயன்படுத்தியும் பலன்கண்டனர். எனவே வள்ளுவர் மனிதர்களுக்குத் தேவையான அறக்கருத்துகளைக் கொடுத்து அவர்களை நல்லமுறையில் நற்பண்புகளையுடையவர்களாக இருக்க வழிவகுத்தார். அதற்கும் மேலாக இயற்கையின் தேவையையுணர்ந்த அவர் சூழலியலின் முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளார்.

## காப்பியங்களில் இயற்கை

தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரியபுராணம் மட்டுமே தமிழ்நாட்டுக் கதைகளை மூலக் கருவாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. மற்றவை சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் தழுவல்களாகவோ அல்லது தமிழாக்கங்களாகவோ

உள்ளன. இதில் தலைமை சான்றதெனச் சிலப்பதிகாரத்தையே சுட்டுவர். இளங்கோவடிகளால் படைக்கப்பட்ட இச்சிலப்பதிகாரக் காப்பியத்தையே தமிழின் முதல் காப்பியம் என்றும் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். இக்காப்பியத்தின் மங்கல வாழ்த்துப் பகுதி இயற்கை வாழ்த்தோடு தொடங்குகிறது. இதனை,

“திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!

கொங்கு அலர் தார்ச் சென்னிக் குளிர் வெண்குடை போன்று,

இவ்அம் கண் உலகு அளித்தலான்

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!

காவிரி நாடன் திகிரிபோல், பொன் கோட்டு

மேரு வலம் திரிதலான்

மா மழை போற்றுதும்! மா மழை போற்றுதும்!

நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளி போல்

மேல் நின்று தான் சுரத்தலான்”

என்று இளங்கோவடிகள் பாடுகிறார் (Srichandran, 2013). சந்திரன், சூரியன், மழை, ஆறு, கடல் என்று இயற்கையே எல்லாவற்றிற்கும் மேலான சக்தி. இவற்றிலிருந்து தான் ஊர்கள் தோற்றம் உருவாக்கம், எல்லாம் அதற்கு அடுத்த நிலையில் தான் இருக்கின்றன என்று இயற்கையை வியந்து போற்றுகின்றனர். “இயற்கையையே முதல் தெய்வமாகத் தமிழர் வழிபட்டதை அடையாளப்படுத்துகிறது. இங்கே இயற்கைக்கு மனிதப் பண்பினை ஏற்றிப் புனையும் ஒரு வகையான முறைமை மூலமானது இயற்கை மனிதன் என்று எதிர் எதிராக நிறுத்தாமல், ஓர் ஒத்திசைவைக் கட்டமைக்கிற பார்வை செயல்படுவதை உணரமுடிகிறது. இயற்கை போல மனிதர்கள் இருக்க வேண்டும். மனிதர்களைப் போல இயற்கையும் இருக்க வேண்டும் என்கிற மாதிரியான ஓர் உறவுக்கு ஏங்குகிற மனித மனத்தை அடையாளம் காணமுடிகிறது” என்கிற க.பஞ்சாங்கம் கருத்து ஏற்புடையதாக அமைகிறது (Panjaangam, 2011). இயற்கை தன்னிடம் உள்ள ஏராளமான நல்லியல்புகளைப் பூமியில் வாழும் மனிதர்களுக்குக் கொடையாகத் தருகிறது. ஆனால் மானிடர்களோ இயற்கையின் புரிதல் இல்லாமலும் அவற்றின் முக்கியத்துவம் தெரியாமலும் இருக்கின்றனர். ஆனால் மேலே சொல்லப்பட்ட காப்பியத்தின் அடிகள் மக்கள் இயற்கையின் நன்மையை உணர்ந்தவர்களாயும், நன்றியோடும் இயற்கையைக் காத்தும், இயற்கையை நினைத்தும், வாழ்த்தியும் இயற்கையோடு இயைந்தும் இருந்ததனை எடுத்தியம்புகின்றன.

## பக்தி இலக்கியத்தில் இயற்கை

சங்க காலத்திற்கு பிறகு தமிழ்நாட்டில் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. துறவறத்திற்குப் பெருமை ஏற்பட்டது. அதனால் மக்களின் காதல் வாழ்வுக்கும் இல்லறத்திற்கும் இருந்த பெருமை குறைய தலைப்பட்டது. இந்த உலகில் உள்ள இன்பங்களை வெறுத்து மறுமையை மட்டும் நாடுவதே கடமை என்ற மனப்பான்மை வலுத்தது. இயற்கையின் மீது அச்சம் கொண்ட ஆதிமனிதன் இயற்கையை வழிப்படத் தொடங்கினான். ஞாயிறு வழிபாட்டில் தொடங்கி திங்கள், மழை, மரம், பறவைகள், விலங்குகள் என்று இயற்கை வழிபாட்டின் தொடர்ச்சியானது பக்தி இலக்கியத்திற்கு வழிவகுத்தது. இயற்கையின் தோற்ற வெளியில் இறைத் தன்மையைக் கண்டும், இறைமையிடத்து இயற்கை உயிரினங்களை இணைத்தும் பார்க்கிற மரபாக, இயற்கைக்கும் இறைமைக்கும் உள்ள தொடர்பு உருவாக்கம் பெற்றது. பக்தி இலக்கியங்கள், இயற்கையையும் இறைவனையும் சமமாகப் பார்க்கிறப் பார்வை இருக்கிறது என்பதற்கு நாயன்மார்கள், ஆழ்வார்களின் பாடல்கள் சான்று பகர்கின்றன. பஞ்சபூதங்களின் இறைத் தன்மையைப் பார்க்கிறப் பார்வையானது இதற்கு சான்றாகின்றது. மேலே சொல்லப்பட்ட நிலம், மரம், செடி, நீர்நிலை, விலங்கு. பறவை என்று எல்லாவற்றிற்குள்ளும் இறைவன் இருக்கின்றான் என்ற சிந்தனையை உணரப்பட்டது. திருஞானசம்பந்தர் ஒவ்வொரு

தலத்தைப் பாடும் பொழுது அங்குள்ள நந்தவனத்தைப் பாடுகின்றார். அப்பர் இயற்கையின் தரிசனத்தைத் தன்னுடைய பாடல்களில் பதிய செய்கிறார். இதனை,

“மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிளவேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தன் இணையடி நிழலே”

என்ற பாடலின் வழி அறியமுடிகிறது. இயற்கையில் இறைமையைக் காண்பதும், இறைமையோடு இயற்கை தொடர்புபடுத்துவதும் இயற்கையைப் போற்றிப் பாதுகாத்தலின் அவசியத்தை உணர்த்துகிற நோக்கத்தையும் முதன்மையாகக் கொண்டது எனலாம். இதனை, பக்தி இலக்கியப் பாடல்களை அணுக்கமாக அணுகுவதன்வழி அறிய முடிகிறது. இயற்கையில் இறைவன் உறைகிறான் என்கிற சித்தாந்தமானது. அதனை அழிக்காது போற்றிக் காத்துக்கொள்ள வேண்டும் என்கிற மையப் பொருண்மையாகவே வெளிப்படுகிறது.

## சிற்றிலக்கியத்தில் இயற்கை

பக்தி இலக்கியத்தின் தொடர்ச்சியாகப் பிரபந்தங்கள் என்றழைக்கப்படும் சிற்றிலக்கியம் தோன்றின. அவற்றில் இயற்கை வருணனை சிறப்பாக அமைந்துள்ளது. அழகாக இருக்கக் கூடிய இடங்கள் அனைத்திலும் இறைவன் இருக்கின்றான். இறைவன் இருக்கின்ற இடங்கள் யாவும் இயற்கை வளம் மிகுந்தவை என்பதனை திருக்குற்றாலக்குறவஞ்சியில் திரிகூடராசப்பக்கவிராயர் வருணிக்கிறார். இதற்கு,

“வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்

மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

கானவர்கள் விழி எறிந்து வானவரை அழைப்பார்

கமனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்

தேன் அருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்

செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்

கூனல் இளம் பிறை முடித்த வேணி அலங்காரர்

குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே”

என்ற பாடல் சான்று பகர்கிறது. சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் பள்ளு இலக்கியமாகும். உழவுத் தொழில் செய்யும் பள்ளர்களின் பழக்க வழக்கங்கள், ஒழுகலாறுகள், தொழில்முறைகள் என்னும் இவற்றின் அடிப்படையில் உருவானதுதான் பள்ளு இலக்கியம். பள்ளு இலக்கியத்தில் முக்கூடற் பள்ளுவே சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. இதன் காலம் கி.பி.1680 ஆகும். நெல்லை மாவட்டத்தின் தாமிரபரணி, சிற்றாறு ஒரு காட்டாறு என மூன்று ஆறுகள் கலக்குமிடமான முக்கூடல்தான் இதன் கதைக் களமாகும். மருதநில வாழ்க்கையோடு பின்னிக் கிடக்கும் இந்நூலில் நெல் வகைகள் குறித்தும், மீன் வகைகள் குறித்தும் முக்கூடற்பள்ளு விவரிக்கின்றது. இதனை,

“சித்திரக் காலிவாலான் சிறைமீட்டான் மணல்வாரி

செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச்சம்பா

முத்து விளங்கிமலை முண்டன்பொற் பாளைநெடு

மூக்கன் அரிக்கிராவி மூங்கிற் சம்பா

கத்தூரி வாணன் காடைக் கழுத்தன் இரங்கள் மீட்டான்

கல்லுண்டை பூம்பாளைபாற் கடுக்கன் வெள்ளை

புத்தன் கருங்குறுவை புனுகுச்சம் பாவும்இரு

பூவுக்கும் விதைசேரிற் போட்டேனாண்டே"

என்கிற பாடல் மூலம் அறியமுடிகிறது. பல்வேறு வகையான நெல் வகைகளையும், 120 மீன் வகைகளையும் இவ்விலக்கியம் பதிவு செய்கிறது. இந்தப் பள்ளு இலக்கியம் நெல்லை மாவட்டப் பகுதியில் பாய்ந்த பொருநை ஆற்றின் செழிப்பையும் பாரம்பரிய நெல்வகைகள் மற்றும் மாடுவகைகள் குறித்த உழவரின் மரபு வேளாண்மை ஞானத்தையும் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமைகிறது. ஆனால் இன்றைய உலகமயமாக்கப்பட்ட சூழலில் மேலே சொல்லப்பட்ட பொருநை நதி மாசடைந்து வறண்டுவிட்டது. பாரம்பரிய நெல்வகைகள், மறைந்துவிட்டன, நாட்டு மாடுகளின் இனம் அழிக்கப்பட்டுக் கறிமாடாக விற்கப்படுகிற அவலம் ஏற்பட்டது. இவை உழவின், உழவரின் சரிவடைந்த நிலைமைக்குக் காரணங்களாகும். இச்சூழலில் முக்கூடற்பள்ளு, நீர் வளத்தோடும், நில வளத்தோடும் வாழ்ந்த உழவரின் பாரம்பரிய உழவின் மேன்மையைப் போற்றுகிற நூலாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.

## முடிவுரை

மேலே சொல்லப்பட்ட சூழலியல் அழிவுகளை மையமிட்டுதான் இன்றைய சூழலியலாளர்களும், அறிவியலாளர்களும், நவீன இலக்கிய எழுத்தாளர்களும் முன்வைக்கிற அறிவுரைகளாக இலக்கியங்களும் இருக்கிறன. இந்த அடிப்படைச் சிந்தனைகளை மையமாகக் கொண்டு சுற்றுச்சூழலியல் கோட்பாடுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. இக்கோட்பாடுகள் சமூகத்திலும் இலக்கியங்களிலும் சூழலியலின் இன்றியமையாமையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றன. விளைவாக இயற்கையை பேணவும், வளம் சேர்க்கவும் மாசு இல்லாத இயற்கையை உருவாக்கவும் உதவுகின்றன என்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

## References


Avvai Duraisamy Pillai, (1957), Ainkurunuru Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

Balasubramaniyam, K.V. (2004) Semmoli ean Etharku, Manivasagar Pathippagam, Chennai, India

Jawahar, K. (2014) Thinai Kotpadum Tamilk Kavithaiyiyalum, Kaviya Pathippagam, Chennai, India

Jeyabal, R. (2011) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Pamayan, (2012) Thinayiyal kotpadugal, Thinayiyal kotpadugal, Chennai, India

Panjaangam, K. (2011) Ilakkiyamum Thiranaaivuk Kotpaadugalum, Annam Veliyetagam, Thanjavur, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Puliyur Kesigan, (2016) Thirukkural Parimelazhagar Urai, Poompuhar Pathippagam, Chennai, India.

Sethupathi, (1964) Sutrusoolal Kalviyum Namathu Kadamaikalum, Senbaga Pathippagam, Chennai, India

Srichandran, J. (2013) Silapathikaram - Source and text, First Edition, Tamil Nilayam, Chennai, India.

Thamizhannal, (2011) Sanga Ilakiya Oppidu, Sellapa Pathippagam, Madurai, India

Varadharasan, M. (1964) Palantamil Ilakiyathil Eyarkai, Paari Nilayam, Chennai, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License